இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 153 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 28 – திங்கள்கிழமை 12 ஜனவரி 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 153 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 28 - Monday 12 January 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00


## வரும் 2026 – சட்டப் பேரவைத் தேர்தலில்

# 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம்!

## கொளத்தூர் – சமத்துவப் பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



**சென்னை, ஜன. 12 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2026) சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, அனைவருக்கும் வாழ்த்துக் கூறி உரையாற்றுகையில், "வரும் 2026 - சட்டப் பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம்" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை எழுச்சியோடு கொண்டாடும் இந்தச் சிறப்பான நேரத்தில் உங்களை எல்லாம் நான் சந்தித்து, இந்த கொளத்தூர் தொகுதியில் - மன்னிக்கவும் - நம்முடைய கொளத்தூர் தொகுதியில் இருக்கக் கூடிய கழகத்தின் செயல்வீரர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் ஒரு நல்ல வாய்ப்பு எனக்கு முன்கூட்டியே கிடைத்திருக்கிறது.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை - அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் - கிழக்கு மாவட்டத்தின் செயலாளராக நம்முடைய சேகர்பாபு அவர்கள் இருந்தாலும், நம்முடைய தொகுதி என்று சொன்னால் அதில் ஒரு எழுச்சி இருக்கும், ஒரு சிறப்பு இருக்கும், ஒரு மகிழ்ச்சி இருக்கும், ஒரு ஆர்வம் இருக்கும், ஆரவாரம் இருக்கும். நம்மையே அறியாமல் நம்முடைய உள்ளத்தில் ஒரு புளகாங்கிதம் இருக்கும். அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய சேகர்பாபு அவர்களுக்கும் அவருக்குத் துணை நின்ற கழக நிருவாகிகளுக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### கொளத்தூர் தொகுதி நிகழ்ச்சி எனக்கு ஒரு எனர்ஜி!

நான் பல நேரங்களில் கொளத்தூர் நிகழ்ச்சிக்கு வருகின்றபோது சொல்வதுண்டு, என்னதான் முதலமைச்சராக இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு, பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி. அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் நேரத்தில் என்ன மகிழ்ச்சி அடைகின்றேனோ, என்ன பெருமை அடைகின்றேனோ - ஆனால், அதைவிட கொளத்தூர் தொகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால், அதில் ஒரு வேகமும், ஒரு எனர்ஜியும் எனக்கு வந்துவிடுகிறது. அந்த எனர்ஜியுடன் தான் நான் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

### தேர்தல் களத்தில் 50 சதவிகிதப் பணியை முடித்துவிட்ட கழகத்தினர்!

பொங்கல் விழாவை இன்றைக்கு நாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்கரை ஆண்டு காலத்தில் என்னென்ன திட்டங்களை யெல்லாம் செய்திருக்கிறது, என்னென்ன சாதனைகளையெல்லாம் புரிந்திருக்கிறது என்பது உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீங்கள் மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதற்காகத்தான் இந்தப் பொங்கல் விழாவை இப்படி எழுச்சியோடு கூட்டி உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்துவதற்காக, இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் தேர்தல் களத்தில் ஆற்றவேண்டிய பணிகளில் 50 சதவிகிதம் முடித்துவிட்டீர்கள். இன்னும் 50 சதவிகிதம் தான் மீதம் இருக்கிறது.

**இன்றைக்கு பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள். ஏன், பா.ஜ.க.வில் இருக்கக்கூடியவர்கள்கூட என்ன சொல்கிறார்கள் என்றால், தி.மு.க.-காரர்கள் போன்று**


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



